**சென்னை மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.65/ IE-Medical Camp/ஒபக/2021 நாள்.01.03.2022**

**பொருள் :** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – சென்னை மாவட்டம் – உள்ளடக்கிய கல்வி முன் தொடக்க நிலை – தொடக்க நிலை – உயர்நிலை மற்றும் மேல்நிலை – மருத்துவ முகாம் விழிப்புணர்வு, வழிகாட்டு நெறிமுறைகள்மற்றும் உதவி உபகரணங்கள்– சார்ந்து.

**பார்வை :**

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6 அவர்களின் கடித ந.க.எண்.314/ஆ5/ஒபக/IE/2021, நாள். .11.2021
2. மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் ஒப்புதல் ந.க.எண்.65/IE-Medical Camp/ஒபக/2021 நாள்.22.02.2022

*****

பார்வையில் காணும் மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்தின் படி சென்னை மாவட்டம் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, உள்ளடக்கியக் கல்வியின் கீழ் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் தேவையை அறிந்து அதனை பூர்த்தி செய்ய ஒவ்வொரு வருடமும் மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது. அதன் அடிப்படையில் 2021–22 ஆம் கல்வி ஆண்டில் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையால் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் பயிலும் மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளதால், சென்னை மாவட்டத்தில் உள்ள **1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகள், வீட்டு வழிக் கல்வி பயிற்சி பெறும் குழந்தைகள்** மற்றும் ஆரம்பகால ஆயத்த பயிற்சி மையங்களில் உள்ள மாற்றுத்திறன் குழந்தைகள் அனைவரையும் இம்மருத்துவ முகாம்களில் கலந்து கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் மருத்துவ முகாம் செயல்பாடுகளை கீழ்கண்டவாறு நடத்தி தருமாறு கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. விழிப்புணர்வு முகாம் நடத்துதல்
2. மருத்துவ மதிப்பீட்டு முகாம் நடத்துதல்
3. அறுவை சிகிச்சை முகாம் நடத்துதல்
4. ALIMCO – வுடன் இணைந்து அளவீட்டு முகாம் நடத்துதல்
5. நடப்பு நிதி ஆண்டில் மருத்துவ முகாமில் கலந்துக் கொள்ளும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறனுடைய மாணவர்கள் உதவி உபகரணங்கள்

பெறுவதற்கு ALIMCO – அளவீட்டு முகாமில் தவறாது கலந்து கொள்ள செய்தல் வேண்டும்.

**விழிப்புணர்வு முகாம் நடத்துதல் வழிமுறைகள் :**

1. உள்ளூர் தொலைகாட்சி மற்றும் ஒலிப்பெருக்கி வாயிலாக மருத்துவ முகாம் நடத்திடும் தேதி, இடம் மற்றும் நேரம் குறித்த விவரங்களை தெரியப்படுத்துதல்.
2. வாகன உதவியுடன் விளம்பரம் செய்தல், வானொலி, கைபேசி மூலம் விழிப்புணர்வு செய்தல்.
3. அனைத்து வட்டாரங்களிலும் பெரிய அளவில் கால அட்டவணை (Flex Banner) தயார் செய்து மக்கள் ஒன்று கூடும் இடங்களில் வைத்தல்.
4. மேலும் தினசரி, நாளிதழ் வாயிலாக பிரச்சாரம் மேற்கொள்ளுதல்.
5. துண்டு பிரசுரங்கள் தேவையான இடங்களில் விநியோகம் செய்தல்.
6. வட்டார அளவில் தொலைபேசி வாயிலாக பள்ளி தலைமைய ஆசிரியர் மற்றும் பெற்றோர்களுக்கும் குறுஞ்செய்தி (Group SMS) அனுப்புதல்.
7. தொடக்க நிலை ஆயத்த பயிற்சி மையங்கள் சார்ந்து விழிப்புணர்வு பேரணி நடத்துதல்.
8. இதை சிறப்பாக மேற்கொள்ள ஒவ்வொரு வட்டார வள மையத்திற்கம் ரூ.1000/– ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

**மருத்துவ முகாம் நடத்துதல் வழிமுறைகள் :**

1. மாவட்ட கல்விக்குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சியர் / ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்படும். ஆணையர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட அளவிலான இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மற்றும் துணை இயக்குநர் (பொது சுகாதாரம்) இவர்களோடு கூட்டம் நடத்தி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.
2. மாவட்ட மருத்துவ துறையின் வாயிலாக கண் மருத்துவர், காது, மூக்கு, தொண்டை நிபுணர், முடநீக்கியல் மருத்துவர் (Ortho), மனநல மருத்துவர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர்களை மருத்துவ முகாமில் கலந்து கொள்ள ஏதுவாக கால அட்டவணை தயார் செய்தல் வேண்டும்.
3. மருத்துவ முகாமிற்கு போதிய அனுபவம் மற்றும் தேசிய அடையாள அட்டையில் கையொப்பமிடத் தகுதியான மருத்துவர்களை தேவையான பிரிவுகளின் வருகை புரிய மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் உதவியோடு ஏற்பாடு செய்திடல் வேண்டும்.

4. மருத்துவ முகாமிற்கு பயிற்சி மருத்துவர்கள் வருகை புரிவதைத் தவிர்த்திட தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

5. **மாநில அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும் (SOP).**

6. ஆசிரியர் பயிற்றுநர், சிறப்பாசிரியர், தலைமை ஆசிரியர், தசைப்பயிற்றுநர் மற்றும் தன்னார்வலர் என 5 பேர் கொண்ட குழு அமைத்து, அவர்களின் தலைமையில் வட்டார அளவில் மருத்துவ முகாம் நடத்திட திட்டமிடப்படுதல் வேண்டும்.

7. மாற்றுத்திறனாளி மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். அவ்வாறு கலந்து கொள்ள ஏதுவாக அவர்களுக்கு போக்குவரத்து பயணப்படி வழங்கப்படுதல் வேண்டும்.

8. தரமான தேநீர், சிற்றுண்டி மற்றும் மதிய உணவு வழங்குதல் வேண்டும். உணவின் தரம் சிறப்பாசிரியர்கள் வாயிலாக சரிபார்க்கப்பட்ட பின்னரே மாணவர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

9. **மாவட்ட மாற்றுத்திறனாளி நலவாழ்வு அதிகாரி உதவியுடன் தேசிய அடையாள அட்டை வழங்க ஆவன செய்தல் வேண்டும்.**

10. அந்தந்த மண்டலகளில் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கான பணியாற்றிவரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களையும் பங்கேற்க செய்தல் வேண்டும்.

11. மருத்துவ முகாம்கள் அனைத்து மண்டலங்களிலும் தனித்தனியே நடத்தப்பட வேண்டும்.

12. முகாமில் கலந்து கொள்ளும் அரசு மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் மதிப்பூதியம் மற்றும் போக்குவரத்து படி வங்கி கணக்கிற்கு ECS மூலமாக மட்டுமே வழங்குதல் வேண்டும்.

13. உணவுச் செலவினம், போக்குவரத்து செலவினம், பயணப்படி, தேநீர் மற்றும் சிற்றுண் ஆகிய செலவினங்கள் முகாமில் கலந்து கொள்ளும் மாற்றுத் திறனுடைய குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் வழங்குதல் வேண்டும்.

**அறுவை சிகிச்சை முகாம் நடத்துதல் வழிமுறைகள் :**

அறுவை சிகிச்சை தேவையுள்ள பலதரப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்களையும் கண்டறிதல் வேண்டும். அதற்கான சிறப்பு முகாமினையும் மாவட்ட ஆட்சியர் ஒப்புதலுடன் இணைந்து நடத்திட வேண்டும். அவ்வாறு கண்டறிந்த மாணவர்களை "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம்" வாயிலாக பயனடைய செய்தல் வேண்டும்.

ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.10000/– (ஒரு மண்டலத்திற்கு) கீழ் காணும் தலைப்பின் கீழ் செலவழித்தல் வேண்டும்.

| வ. எண் | விவரம் |
|---|---|
| 1 | விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல் |
| 2 | உணவுச் செலவினம் |
| 3 | குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கான போக்குவரத்துச் செலவினம் |
| 4 | தேநீர், சிற்றுண்டி மற்றும் குடிநீர் செலவினம் |
| 5 | மருத்துவர்கள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்களுக்கான செலவினம் |

**ALIMCO அளவீட்டு முகாம் நடத்துதல் வழிமுறைகள் :**

1. மருத்துவ முகாம் ALIMCO அளவீட்டு முகாமுடன் சேர்ந்து நடத்திடல் வேண்டும்.
2. குழந்தைகள் எவ்வித சிரமமும் இன்றி ALIMCO அளவீட்டு முகாம்களுக்கு வந்து செல்வதற்கு முறையான வாகன வசதி ஏற்படுத்தி தரப்பட வேண்டும்.
3. எக்காரணத்தை முன்னிட்டும் மாணவர்களை தேவையில்லாமல் அதிக நேரம் காத்திருக்க வைக்ககூடாது.
4. ALIMCO அளவீட்டு முகாமில் கண்டறிந்த குழந்தைகளுக்கு உதவி உபகரணங்கள் Wheel Chair, Tricycle, Rollater, Hearing Aid, Crutches Prosthetics, CalliPers, MSIED Kit ALIMCO நிறுவனத்தில் கொள்முதல் செய்யப்படலாம்.
5. மாற்றுத் திறனுடைய மாணவ / மாணவிகளின் தேவைப்படும் உதவி உபகரணங்கள் எந்த துறையிடமிருந்து பெற்று வழங்கப்படுகிறது (ALIMCO, Non ALIMCO) என்ற விவரத்தை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறும், உதவி உபகரணங்கள் வழங்கப்பட்ட பின் சிறப்புப் பயிற்றுநர்கள் அந்தந்த தலைமையாசிரியர்கள் EMIS – ல் மூலம் உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

**உட்செவி சுருள் பதியம் (Cochlear Implant) அறுவை சிகிச்சை**

**உட்செவி சுருள் பதியம் (Cochlear Implant)**

அறுவை சிகிச்சை செய்த குழந்தைகளின் பேச்சுத்திறன் பயிற்சி மேம்பாடு குறித்து பரிசோதித்து பேச்சுத்திறன் அளவு தொடர்ந்து மேம்பாடு அடையும் வரை பயிற்சி பெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

**அறுவை சிகிச்சை மூலம் உட்செவி சுருள் பதியம் (Cochlear Implant)**

- அறுவை சிகிச்சை செய்த குழந்தைகளின் காதொலிக்கருவி பழுதடைந்து இருப்பின் Rashtriya Bal Swasthya Karyakram (RBSK) மருத்துவக் குழுவிடம் தெரிவித்து அவற்றை சரிசெய்து வழங்க வேண்டும்.
- அறுவை சிகிச்சை செய்த குழந்தைகளுக்கு பேச்சு பயிற்சி கட்டாயம் வழங்கி அந்த மாணவர்களின் தற்போதைய நிலையை EMIS – ல் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**RBSK வாயிலாக மேற்கொள்ளப்படும் அறுவை சிகிச்சை விவரம்**

| வ.எண் | RBSK வாயிலாக வழங்கப்படும் அறுவை சிகிச்சை விவரம் |
|---|---|
| 1 | Cleft Lip & Palate |
| 2 | Cochlear Implantation Surgery |
| 3 | Eye Surgery |
| 4 | Tongue tie Surgery |
| 5 | Ortho Surgery |
| 6 | Other Surgeries |

**மருத்துவ மற்றும் ALIMCO முகாம்களை கீழ்கண்ட நாட்கள் மற்றும் மண்டலங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.**

| வ. எண் | தேதி | மண்டலம் | மருத்துவ முகாம் நடைபெறும் இடம் | தொடர் கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் |
|---|---|---|---|---|
| 1 | 04.03.2022 | மண்டலம்–10 மையலாப்பூர் | சென்னை தொடக்கப் பள்ளி, 29வது குறுக்கு தெரு, இந்திரா நகர், அடையாறு, சென்னை–20 | 9788858519, 9841311986, 9092890370 |
| 2 | 07.03.2022 | மண்டலம் – 7 எழும்பூர் | சென்னை நடுநிலைப் பள்ளி, ராமா தெரு, வள்ளுவர் கோட்டம், (சுதந்திர பூங்கா அருகில்), நுங்கம்பாக்கம். சென்னை–34 | 9788858516, 9962041666, 9941385747 |
| 3 | 08.03.2022 | மண்டலம் – 8 தி.நகர் | சென்னை நடுநிலைப் பள்ளி, பிரகாசம் சாலை, பனகல் பார்க் அருகில், தி.நகர், சென்னை–17 | 9788858517, 9940223135, 9677315790 |
| 4 | 09.03.2022 | மண்டலம் – 2 இராயபுரம் | சென்னை உருது பெண்கள் தொடக்கப் பள்ளி, எண்.71, அரத்தூண் சாலை, இராயபுரம், சென்னை–13 | 9788858511, 9788877955, 8939022372 |
| 5 | 10.03.2022 | மண்டலம் – 4 பெரம்பூர் | சென்னை தொடக்கப் பள்ளி, T.V.K. நகர். பெரம்பூர், சென்னை–11. (Near T.V.K Nagar Bus Depot) | 9788858513, 9094308501, 9788232391 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 11.03.2022 | மண்டலம் – 1<br>ஜார்ஜ் டவுன் | சென்னை நடுநிலைப் பள்ளி,<br>13, புத்தா கண்ணன் தெரு,<br>கொருக்குப்பேட்டை,<br>சென்னை–21 | 9788858510,<br>9445249978,<br>8778559470 |
| 7 | 14.03.2022 | மண்டலம்–3<br>பெரியமேடு | சென்னை நடுநிலைப் பள்ளி,<br>VK பிள்ளை தெரு, சூளை,<br>சென்னை–112 | 9788858512,<br>9884147647,<br>9884149692 |
| 8 | 15.03.2022 | மண்டலம்–5<br>புரசைவாக்கம் | சென்னை நடுநிலைப் பள்ளி,<br>Mcnicholas Road,<br>சேத்துபட்டு, சென்னை–31<br>(Near Chetpet Bridge) | 9788858514,<br>9597642183,<br>8778953394 |
| 9 | 16.03.2022 | மண்டலம்–6<br>திருவல்லிக்கேணி | சென்னை சமுதாய கல்லூரி,<br>24, அருணாச்சலம் தெரு,<br>திருவல்லிக்கேணி,<br>சென்னை–5 | 9788858515,<br>9940021848,<br>8939254871 |
| 10 | 17.03.2022 | மண்டலம் – 9<br>அடையாறு | சென்னை தொடக்கப் பள்ளி,<br>4வது பிராதான சாலை,<br>சி.ஐ.டி. நகர், நந்தனம்,<br>சென்னை–35 | 9788858518,<br>9941440131,<br>9094919655 |

மருத்துவ மதிப்பீட்டு முகாம் நடைபெற்றபின் முகாம் நடைபெற்ற தேதி, முகாமில் கலந்து கொண்ட மாற்றுத்திறனுடைய மாணவர்களின் விவரம், மருத்துவர்களின் ஆலோசனை விவரம், மருத்துவர்களின் ஆலோசனையின் வழியாக வழங்கப்பட வேண்டும். விவரங்கள் அனைத்தும் EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது. பின்னர் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட உதவி உபகரணங்களை தொடர்ந்து புதுப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட சிறப்புப்பயிற்றுநர் மற்றும் தெரபிஸ்டு அறிவுறுத்தப்பட வேண்டும்.

உதவி உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கு மாவட்ட அளவில் குறைந்தபட்சம் 6 பேர் கொண்ட குழுவினை (உதவி மற்றும் கூடுதல் மாவட்டத்திட்ட ஒருங்கிணைப்பாளர், சுகாதாரத் துறையிலிருந்து மருத்துவர் (Ortho), மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட IE ஒருங்கிணைப்பாளர், அனுபவம்மிக்க சிறப்புப் பயிற்றுநர் மற்றும் தெரபிஸ்டு) என அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்காணும் விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம்கள் சார்பாக நாளிதழ்களில் பத்திரிக்கை செய்தி அளிக்க மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் ஒப்புதலுக்கு பின் கடித நகல் உரிய அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதனை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

for 01/03/22

01.03.22

முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
சென்னை மாவட்டம்

பெறுநர்

அனைத்து மண்டல மேற்பார்வையாளர் (பொ)